**இறக்காமம் பிரதேச சபை,**
**அம்பாரை மாவட்டம்.**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 19 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து இறக்காமம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்கீட்டுக் குறைபாடு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண உள்ளூராட்சி அமைச்சினால் ரூபா 10 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டில் சபைக்கு கையளிக்கப்பட்ட அலுவலகக் கட்டிடத்தின் பெறுமதி கணக்குகளுக்கு கொண்டுவரப்படாமையால் திரண்டநிதி மற்றும் நிலையான சொத்து என்பன அதே தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | சபைக்குச் சொந்தமான கட்டிடத்தின் பெறுமதி கணக்குகளுக்கு நிலையான சொத்தாக கொண்டுவரப்படல் வேண்டும். | பிரதேச சபைக்கட்டிடம் தொடர்பான ஆவணங்களை உரிய அமைச்சிடம் இருந்து பெற்று இறுதிக்கணக் கறிக்கையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**(ஆ) ஆவணச்சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 4,505,898 பெறுமதியான 02 கணக்கு விடயங்களுக்குரியதாக காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் மீதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | நிலையான சொத்துப் பதிவேட்டில் காணிகட்டிடங்கள் பதியப்படுவதுடன விபரமான ஆவணச்சான்றுகளை சம்மாந்துறை பிரதேச சபையிலிருந்து சேகரிப்பது தொடர்பாக எங்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுள்ளது. |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் அத்தியாயம் x இன் பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கூற்றுக்கள் உரிய காலத்தில் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையின் ஒவ்வொரு நிதியாண்டுக்குமான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்படுகின்றபோதும், அது தொடர்பான விபரமான கூற்று இனி வரும் காலங்களில் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த 02 வைப்புக்கள் ரூபா 85,907 தொடர்பில் சபை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. | காலங்கடந்த வைப்புக்கள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவர்கள் இவ்வருடம் அதனை மீளப்பெறுவதற்கு தவறும் பட்சத்தில் 2019 ஆம் நிதியாண்டின் இறுதியில் வருமானமாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானங்களிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 341,092 ஆக இருந்ததுடன், அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 2,156,203 தொகையாக ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 மதிப்பிடப் பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | 2017 மதிப்பிடப் பட்ட வருமானம் | 2017 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 100,000 | 18,250 | 18,250 | -- | 30,000 | 43,750 | 43,750 | -- |
| வாடகைகள் | 1,980,000 | 920,650 | 1,018,450 | 1,034,023 | 4,075,400 | 3,743,335 | 3,684,000 | 1,131,823 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 705,000 | 817,410 | 817,410 | -- | 670,000 | 672,590 | 673,000 | -- |
| ஏனைய வருமானம் | 6,021,000 | 3,930,944 | 3,930,944 | -- | 2,258,000 | 1,990,592 | 1,990,592 | -- |
| | 8,806,000 | 5,687,254 | 5,785,054 | 1,034,023 | 7,033,400 | 6,450,267 | 6,391,342 | 1,131,823 |

### 2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்படவேண்டிய வருமானம் ரூபா 6,819,077 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 5,785,054 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 85% ஆக காணப்பட்டிருந்தது. | கடந்த வருட நிலுவைகளுடன் மீளாய்வாண்டுக்கான வருமானத்தினையும் அறவிட நடவடிக்கை எடுத்தல் | பதில் அளிக்கப்படவில்லை |

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட அசைவற்ற ஆதனங்களை மாற்றுகையில் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் நேரடியாகவும் நடமாடும் சேவைகள் மூலமாகவும் அறவிட்ட மேலதிக முத்திரை தீர்வை கணக்கிடப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை. | விடுபட்ட நிலுவை தொகைக்கான முத்திரை தீர்வை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு அறவிட நடவடிக்கை எடுத்தல். | பதில் அளிக்கப்படவில்லை |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக 20 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்தப்பட்டிருக்க வேணடும். இருநதும், பிரதேச சபையினால் 2013 ஒக்டோபர் 30 ஆம் திகதி 05 விடயங்கள் தொடர்பில் உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் கிழக்கு மாகாண உள்ளுராட்சி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், 2018 திசெம்பர் 31 வரையிலும் அவற்றிக்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத் தப்படல் வேண்டும். | சட்ட பிரிவின் கோரிக்கைக்கு அமைய மிக அண்மைக்காலத்தில் மீண்டும் தற்போதுள்ள சபை அனுமதியினை பெற்று திருத்தங்களுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன். |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகளுக்கேற்ப செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயல்பாடுகள் தொடர்பிலான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை |

**(இ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2015ஆம் ஆண்டில் ரூபா 1,338,328 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட விலங்கு அறுக்கும் கொல்களமானது அருகாமையில் மயானம் அமைந்துள்ளமையை கருத்தில்கொள்ளாது அமைக்கப்பட்டமையினால் பொதுமக்களின் எதிர்ப்புகளிற்கு மத்தியில் இன்றுவரை பயன்படுத்தப்படாது காணப்படுகின்றது. | குறித்த நோக்கம் அல்லது வேறு தேவைகளுக்கு கட்டிடத்தை பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கௌரவ முதலமைச்சரின் செயலாளரின் ஆலோசனைக்கிணங்க இந்நிலையம் தற்போது திண்மக்கழிவுகளை மீள்சுழற்சி செய்வதற்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |

### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும். இருப்பினும் இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அடையாளம் கண்டு அதனை அடைவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுத்தல். | பதில் அளிக்கப்படவில்லை |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அலுவலகக் கட்டிடம், பொதுநூல் நிலையம், பொதுச்சந்தை, பொது விளையாட்டு மைதானம் மற்றும் விலங்கு அறுமனை என்பன அமைந்துள்ள உரிமத்தினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளை முடிக்குரிய காணிக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பாரதீனப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சபைக்குச்சொந்தமான காணிகட்டிடங்களின் உரிமைப்பத்திரங் களைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக ஏலவே எங்களால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் குறித்த காணிகளின் உத்தியோகபூர்வ ஆவணங்களை பெற்றுக்கொள்வது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் 05 பதவிகளுக்கான ஆளணிகள் மீளாய்வாண்டின் இறுதிவரை நிரப்பப்பட்டிருக்கவில்லை. மேலும், 2014 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்ட சபையின் வருமானப் பரிசோதகர் பதவிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படாததினால் வருமான வழிகளை இனங்காணல் மற்றும் வருமான அறவீடு போன்ற செயற்பாடுகளை திறன்பட செயற்படுத்தப்படாது காணப்படுகின்றது. | சபையில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கான முறையான நிர்வாக நடவடிக்கைகளை சபை எடுக்க வேண்டும். மேலும், வருமானப் பரிசோதகர் பதவிக்கான ஆட்சேர்ப்பு விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருமானங்களை திரட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருமானப் பரிசோதகர் வெற்றிடம் தொடர்பாகவும் அதன் தேவையினையும் உணர்த்தி திணைக்களத்தலைவருக்கும் அமைச்சின் செயலாளருக்கும் பல கோரிக்கைக்கடிதங்களை அனுப்பியுள்ளோம். எனினும் இவ்வெற்றிடம் இது வரை நிரப்பப்படாதுள்ளதுடன் 2019 ஆண்டு இவ்வெற்றிடம் நிரப்பப்படும் என அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். மேலும் இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கும் எழுத்து மூல கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987அம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134ஆம் பிரிவுக்கமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 305 வர்த்தக நிலையங்கள் மற்றும் 4,673 வீடுகள் மீது 2010ஆம் ஆண்டு தொடக்கம் வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 2,500,000 தொகையான வருமானம் இழக்கப்படுகின்றது. | சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட அபிவிருத்தி யடைந்த பிரதேசங்களை இனங்கண்டு அப்பிரதேசங்களில் சோலைவரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதன் மூலம் சபையின் வருமானத்தை அதிகரிக்கலாம். | எமது இறக்காமம் பிரதேசம் அபிவிருத்தி அடையாத வருமானம் குறைந்த வறிய மக்களை அதிகமாகக் கொண்ட ஒரு பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் வசிப்போரின் பிரதான தொழில் விவசாயம் மற்றும் மீன்பிடி என்பனவே ஆகும். எவ்வாறாயினும் வரி அறவிடல் தொடர்பாக அனுமதியொன்றினை பெற்றுக்கொள்ளும் பொருட்டு கௌரவ தவிசாளரால் சபைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட போதிலும் வருமான மட்டத்தினையும் குறித்த வருமான மட்ட பிரிவினர் வசிக்கும் பிரதேசத்தை இனங்காண்பதில் உள்ள சிக்கல் காரணமாக இதற்கான அனுமதியினை சபை வழங்கவில்லை. |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதிவரை சபைக்கு சொந்தமான காணிகள் | நிலையான சொத்துப் பதிவேடுகள் உரிய | தங்களால் குறிப்பிடப்பட்ட காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகளில் |

| | | |
|---|---|---|
| மற்றும் கட்டிடங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 18,514,344 தொகையாக கணக்குகளில் காட்டப்பட்ட போதிலும், அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்களைப் பெற்று முறையாக இற்றைப்படுத்தி கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | ரூபா 18,514,344 பெறுதியான காணிகள் மற்றும் கட்டிடங்கள் எமது சபை சம்மாந்துறைப் பிரதேச சபையின் உப அலுவலகமாக இருந்து தனியான பிரதேச சபையாக பிரிக்கப்பட்ட போது சொத்துக்கள் பொறுப்புக்கள் ஒப்படைக்கும் போது இறுதிக்கணக்கறிக்கையில் காட்டப்பட்ட போதும் அது தொடர்பாக ஆவணச் சான்றுகள் எதுவும் ஒப்படைக்கப்படாததுடன் அவை தொடர்பான விபரங்களும் தற்போது அவர்களிடம் இல்லாததால் அக்குறித்த பெறுதியான சொத்துக்களை சொத்துப் பதிவேட்டில் பதிவதில் சவால்களை எதிர் நோக்குகின்றோம். |

### 3.5.2 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 12 வாகனங்கள் பொதுச்சந்தை வளாகத்தில் உரிய பாதுகாப்பின்றிய நிலையில் காணப்படுகின்றது. | சபையின் வாகனங்களை பாதுகாப்பதற்கான முறையான வாகனத் தரிப்பிட வசதிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேற்படி விடயம் சம்மந்தமாக எமது சபைக்கு சொந்தமான வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கு வாகனத் தரிப்பிடம் ஒன்றை அமைப்பதற்காக ஏலவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சபை நிதிப் பற்றாக்குறை காரணமாக 2019 ஆண்டுக்கான மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து பெறுவதற்கு தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |

### 3.5.3 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 01 JCB இயந்திரம் மற்றும் 01 Motor Lorry போன்றவை சிலமாத காலமாக திருத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது. | வாகனங்களை திருத்தி மீளப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | JCB வாகனத்தை திருத்தும் பொருட்டு இவ்வாகனத்தை திருத்துவதற்கு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான Awarns mart நிறுவனத்திடம் கோரிக்கை விடுவிக்கப்பட்டது. இந்நிறுவனத்திலிருந்து வருகை தந்த Mechanical Engineer இவ் உதிரிப்பாகங்கள் சீனாவிலிருந்து பெறப்பட வேண்டும் என்றும் தற்போது சீனாவில் ஒரு மாத காலத்துக்கு விடுமுறை என்பதால் இரு மாத காலங்கள் தேவை என குறிப்பிட்டார். இதன் படி அவசரமாக இதனையும் மற்றைய வாகனங்களையும் திருத்தி சேவைக்கு பயன்படுத்தப்படும். |

### 3.5.4 விளைவற்ற/ குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) UNDP செயற்திட்டத்தின் கீழ் ரூபா 4.975 மில்லியன் செலவில் 2017ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பொதுச்சந்தைக் கட்டிடத்தின் மேல் பகுதி 2019 மே 14 வரை பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுகின்றது. | பிரதேச வியாபாரிகளை ஊக்குவிப்பதன் மூலம் சந்தை நடவடிக்கைகளை விரிவுபடுத்தி பொதுச்சந்தை கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். | மேற்படி தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட பொதுச் சந்தை கட்டிடத்தின் மேல் பகுதியானது பெருநாள் போன்ற விஷேட தினங்களில் வாராந்த பொதுச் சந்தைக்காக பயன்படுத்தப்படுவதுடன் சில பொது வைபவங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |
| (ஆ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் அபிவிருத்தி நிதித் திட்டத்தின் கீழ் ரூபா 4.690 மில்லியன் செலவில் 2018 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட கடைத் தொகுதியானது 2019 மே 14 வரை குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுகின்றது. | குறிப்பிட்ட கட்டிடத்தை வாடகைக்கு விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட கடைத் தொகுதயின் மாதாந்த வாடகையைத் தீர்மானிப்பதற்காக விலை மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவை முடிவடைந்ததும் வாடகைக்கு வழங்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |
| (இ) குறித்தொதுக்கப்பட்ட மாகாண நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் 2016 கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 325,000 பெறுமதியான கழிவுகள் அரைக்கும் இயந்திரமானது 2019 மே 14 வரை சபையினால் உரிய இடத்தில் பொருத்தப்படாது பயனற்றுக் காணப்படுகின்றது. | குறிப்பிட்ட கழிவு அரைக்கும் இயந்திரத்தை பொருத்தி பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | குறித்த இடத்தில் அதனை பொருத்துவதனால் அதனை பராமரிப்பதற்கு ஏற்படும் மேலதிக செலவு மற்றும் பாதுகாப்பு தேவைகளை கருத்திற்கொண்டே அவ்வியந்திரம் பொருத்தப்படாமல் காணப்படுகின்றது. |

### 3.5.5 வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இருப்பு மெய்மையாய்வுக் குழுவினால் ஏலவிற்பனைக்காக பரிந்துரைக்கப்பட்ட 7 பொருட்கள் கணக்காய்வுத் திகதியான 2019 மே 14 வரை விற்பனை செய்யப்படாமல் காணப்படுகின்றது. | வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வுச் சபையின் பரிந்துரைக்கமைய அரசாங்க நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இப் பொருட்களை தற்போது விற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |

### 3.5.6 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மாகாண குறித்தொதுக்கப் பட்ட நன்கொடை வேலைத் திட்டத்தின் கீழ் இறக்காமம் பொது நூலகக் கட்டிடம் விரிவுபடுத்தல் வேலைக்காக ரூபா 997,403 தொகை செலவிடப்பட்டிருந்தது. இவற்றில், நூலகத்தின் ஜன்னல்கனுக்கு அலுமினிய கம்பி பொருத்துதல் மற்றும் கண்ணாடியிடலுக்கு ரூபா 58,907 தொகை கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் குறித்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காது தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் கொடுப்பனவிற்காக சிபாரிசுசெய்யப்பட்டுள்ளது. | ஒப்பந்தத்தின் பிரகாரம் வேலை நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்கே கொடுப்பனவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இறக்காமம் பொது நூலகக் கட்டிடம் விரிவுபடுத்தல் வேலைத்திட்டமானது 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் நடைபெற்றது. எனினும் இதற்கான கொடுப்பனவு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. மேலும் தங்களால் சுட்டிக் காட்டப்பட்ட ஜன்னல்கள், இக்கட்டிடத்தின் மேற் கூரை இடாமையினால் சேதமடையக் கூடும் என்பதால் பொருத்தப்பட வில்லை. எனினும் கொடுப்பனவு செய்யப்படுவதற்கு முன் அவை பொருத்தப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| (இ) நகரத்திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாணிக்கமடு மத்திய வீதி கொங்றீட் இட்டு செப்பனிடல் வேலை 1.67 மில்லியன் செலவில் நிறைவேற்றப்பட்டிருந்தது. இவற்றில் பாதையின் இருமருங்கிலும் மண் இடலுக்கு சபையினால் ரூபா 38,950 அனுமதிக்கப்பட்டுள்ளது. களப்பரி சோதனையின் போது மண்ணானது செப்பனிடப்படாமல் வழிந்தோடிய நிலையில் காணப்பட்டிருந்தது. | குறித்த வேலையினை ஒப்பந்தக்காரரால் பிடிகாசு வழங்கும் முன் சீர்செய்ய நடவடிக்கை எடுத்தல். | தங்களால் குறிப்பிடப்பட்ட குறித்த வீதியானது இறக்காமம் மாணிக்கமடு பிரதேசத்தில் அமைக்கப்பட்டதாகும். குறித்த பிரதேசமானது மலைப்பிரதேசத்தை அண்டிய பிரதேசமாக காணப்படுவதால் வீதியின் இரு மருங்கிலும் போடப்பட்ட மண் அதன் பின் பெய்த மழை நீரினால் மண் வழிந்தோடியுள்ளது. இக்குறைபாடு குறித்த ஒப்பந்தக்காரரால் பிடிகாசு வழங்கும் முன் சீர்செய்யப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |
| (ஈ) நகரத்திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வரிப்பத்தான்சேனை சுகாதார நிலைய வீதி கொங்கிறீட் இட்டு செப்பனிடல் வேலை 1.73 மில்லியன் செலவில் நிறைவேற்றப்பட்டிருந்தது. இது தொடர்பில 166 m நீளமான கொங்கிறீட் வீதியின் மதிப்பீட்டறிக்கையானது கொங்கிறீட் இடலின் அடிப்படை வேலைப்பிரிவுகளான shuttering மற்றும் Road leveling இல்லாமல் தயாரிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டறிக்கை தயாரிக்கப்படும் போது வேலையின் முக்கிய வேலைப்பிரிவுகள் கருத்தில் கொள்ளப்பட்டு தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் மதிப்பீட்டறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும். | மேற்படி வீதி மதிப்பீட்டறிக்கை தயாரிக்கும் போது Shuttering, Road levelling தவறாக விடப்பட்டுள்ளதோடு வேலைகள் மேற்கொள்ளும் போது ஒப்பந்தக்காரர்களுடன் இணைந்து இவை பூர்த்தி செய்யப்பட்டது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை |

### 4.2 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள் மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக 2003 முதல் 2010 வரையான காலப்பகுதி முதல் நிலுவையாக காணப்படும் இறைச்சிக் கடை குத்தகை மீதான ரூபா 1,029,223 தொகை காட்டப்பட்டுள்ள போதிலும், அவை தொடர்பான ஆவணங்கள், பதிவேடு மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் எதுவுமின்றி கணக்குகளில் காட்டப்பட்டு வருவதுடன் நிலுவைகளை அறவிட அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிக்க 2019 மே 14 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிடுவதற்கு அல்லது முறைப்படி பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போது இந்த இறைச்சிக்கடைகளுக்கான குத்தகைகளை வழங்குபவர்களை இனங்காண முடியாமையாலும், அந்நபர்கள் தற்போது குறித்த முகவரியில் வசிக்காத காரணத்தினாலும் குறித்த தொகையினை விட்டுவிடுவதற்கான அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக என்னால் ஏலவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 2004 ஆம் ஆண்டுக்குரிய நிலுவைகளில் ரூபா 3000.00 ஐ மாத்திரமே அறவிட முடிந்தது. |